**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 178/2024**
**U/s.** 294(b),506(2) IPC r/w4of TN Prohibition Charging Exorbitant interest Act
**PROSECUTION WITNESS NO. 7 (LW. 11)**

| | |
|---|---|
| **Name** : திருமதி. சந்திரா **(IO)** | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2026** |

**1** வது எதிரி ஆஜர். **2** வது எதிரி ஆஜர் இல்லை.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு. பரத் , பெஞ்ச் கிளார்க் . செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No.178/2024 13.07.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.11 FN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஏற்கனவே கடந்த 18.04.2023 ம் தேதி தஞ்சை நகர மேற்கு காவல்நிலைய ஆய்வாளராக பணியில் இருந்தபோது, தஞ்சாவூர் கரந்தையை சேர்ந்த சுரேஷ்பாபு என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. அம்பிகாபதி அவர்களால் வழுங்கப்பட்ட மனு எண் 295/2023 யை விசாரணை செய்து, உதவி ஆய்வாளர் திரு. சக்திவேல் அவர்கள் 18.04.2023 ம் தேதி காலை 8.00 மணிக்கு நிலைய குற்ற எண் 482/2023 சட்டபிரிவுகள் 294(b),506(2) இதச உடன் சேர்ந்த 4of TN Prohibition Charging Exorbitant interest Actன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்பு வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று விசாரணை செய்ததில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் அறிவழகன் மற்றும் கணேசன் ஆகியோர்களை அன்றையதினமே காலை 10.00 மணிக்கு கீழராஜவீதி, ஓம்சக்தி பிரிண்டர்ஸ்அருகில் குற்றம் காரணம் கூறி, நீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி கைது செய்தும், 2 வது எதிரி கணேசன் எவ்வித துன்புறுத்தலும், அச்சுறுதலும் இன்றி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் ரவிச்சந்திரன் மற்றும் பரமகுரு ஆகியோர் முன்னிலையில் 10.15 மணிக்கு பதிவு செய்தேன். பின்பு எதிரிகளுடன் நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

3. பின்பு அன்றையதினம் 14.30 மணிக்கு சாட்சிகள் மணிகண்டன் மற்றும் மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை

மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ 5. மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 6 ஆகும்**. பின்பு மகஜர் சாட்சிகள் மற்றும் இதர பட்டியல் சாட்சிகளான சுரேஷ்பாபு, சுரேஷ்குமார், கோவிந்தராஜ், விவேகனானந்தன், மணிகண்டன், மாரிமுத்து, ரவிச்சந்திரன் மற்றும் பரமகுரு ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்பு 20.04.2023 ம் தேதி வழக்கில் மனு ரசீது வழங்கிய திரு. அம்பிகாபதி மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு. சக்திவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், இத்துடன் எனது விசாரணையை முடித்து கொண்டு எதிரிகள் மீது சட்டபிரிவுகள் 294(b),506(2) இதச உடன் சேர்ந்த 4of TN Prohibition Charging Exorbitant interest Actன் படி குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**(1,2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு போதிய அவகாசம் அளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் சாட்சியின் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம் - S.T. கனிமொழி.,

நீதித்துறை நடுவர் எண்–I,

தஞ்சாவூர்.